# வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் இலவச எலும்பியல் மருத்துவ முகாம்

சென்னை, அக். 11: சென்னை வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் எலும்பியல் தொடர்பான இலவச மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை (அக்.12) நடைபெறவுள்ளது.

உலக மூட்டு வீக்கம் (கீழ்வாதம்) தினத்தை முன்னிட்டு, செளந்தர பாண்டியன் எலும்பு மூட்டு மருத்துவமனை சார்பில் முகாம் நடைபெறும். முகாமில் எலும்பியல் தொடர்பான ஆலோசனைகள், பரிசோதனைகள், இயன்முறை மருத்துவர்களின் அறிவுரை வழங்கப்படவுள்ளது. மெட்ரோ ரயில் பயணிகள், பொதுமக்கள் ஆகியோர் இந்த முகாமை பயன்படுத்திக் கொள்ள மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.